# 1757-ல் தென் தமிழகம்

**பூ**லித்தேவன் - நெற்கட்டான் செவலைத் தலைமை இடமாகக் கொண்டு ஆண்டு வந்த பாளையக்காரர்.

இவர் சந்தித்த போர்களும் அவற்றின் விளைவுகளும் என்ன...?

* 1755 – கர்னல் ஹெரான் பூலித்தேவனின் கோட்டையை முற்றுகையிட்டு, பூலித்தேவனை கப்பம் கட்ட நிர்ப்பந்தம் செய்தார். “விண் பொழியுது; மண் விளையுது... மன்னர்க்கும் உண்டோ திறை..’’ என்ற சுதந்திர முழக்கத்தால் ஹெரானை கதிகலங்கவைத்தார். தன் நிலப்பகுதியில் கப்பம் வசூலிக்கும் உரிமை வெள்ளையர் உள்ளிட்ட எவருக்கும் கிடையாது என வீர முழக்கமிட்டு வெள்ளையனை விரட்டியடித்தார். அது – முதல் வெற்றி.

* அதே ஆண்டு. களக்காட்டிலும், நெற்கட்டான்செவல் கோட்டையிலும் நடைபெற்ற போரில் ஆங்கிலேயரின் கைக்கூலியான மாபூஸ்கானை தோற்கடித்தார். அடுத்து திருவில்லிபுத்தூர் கோட்டையில் நடைபெற்ற போரில் ஆற்காடு நவாபின் தம்பி தோற்கடிக்கப்பட்டான்.

2



* *1760 – யூசுப்கான் நெற்கட்டான்செவல் கோட்டையைத் தாக்கியபோது, அவரை ஓட ஓட விரட்டினார்.*

* *1766 – கேப்டன் பவுட்சன் வாசுதேவநல்லூர் கோட்டையைத் தாக்கியபோதும் அம்முயற்சியை முறியடித்து வெற்றி கொண்டார்.*

* *1767 – இறுதிப் போரில், வஞ்சக சூழலால் ஆங்கிலேயரிடம் பிடிபட்டார்.*

*இத்தனை போர்களை பூலித்தேவன் சந்தித்தபோது, அவருக்கு நெருக்கடி ஏற்பட்ட சூழ்நிலையில் ஆங்கிலேயருக்கு எதிரான போர்கள் என்ற வகையில் டச்சுக்காரர்களும் பிரெஞ்சுக்காரர்களும் உதவ முன்வந்தனர். ஆனால் பூலித்தேவன் அவர்களை நேசத்தோடு பார்க்கவில்லை. பேய்களில் எந்தப் பேயாய் இருந்தால் என்ன என்று நினைத்து, அந்த உதவியைப் பெற மறுத்துவிட்டார். இவருடைய சுதேசி சிந்தனையாலேயே, இன்றளவும் இவரை தனித்துவப் பார்வை கொண்டு நாம் பார்க்கிறோம்.*

*தென்னகத்தில் முதல் முதலாக ஆங்கிலேயர் தரப்பிலிருந்து மிகப் பெரும் தாக்குதல்களைச் சந்தித்தவர் என்ற முறையிலும், அவர்களுக்கு தக்க பதிலடி கொடுத்தவர் என்ற முறையிலும் பூலித்தேவனின் வாழ்க்கையை சற்று பார்ப்போம்.*

*மதுரையில் நாயக்க மன்னர்களின் ஆட்சி 1529 முதல் 1736 வரை இருந்தது. இவர்களில் விசுவநாத நாயக்கர் முதல்வர். இவர் 1529 முதல் 1564 வரை ஆட்சியில் இருந்தார். இவர் ஆட்சி காலத்தில்தான் பாண்டிய நாடு 72 பாளையங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு பாளையமும் ஒவ்வொருவரின் கட்டுப்பாட்டில் விடப்பட்டு, அந்த பாளையத்துக்கு உட்பட்ட அதிகாரங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டன.*

*பாண்டிய வம்சத்தினர் மீண்டும் படை திரட்டி ஆட்சியைப் பிடித்துவிடக் கூடாதே, அதனால்தான் இப்படி பாளையங்கள் பிரிக்கப்பட்டன. மதுரை, திருச்சி, கொங்குநாடு ஆகிய பகுதிகளில் தெலுங்கர்களையே நாயக்க மன்னன் நியமித்தான். திருநெல்வேலிச் சீமையில்தான் தமிழர்கள் நியமிக்கப்பட்டனர்.*

*மேலும் பாண்டிய வம்சத்தின் சிலரையும் பாளையக்காரர்களாக நியமித்து வம்சாவளி எதிர்ப்பையும் அடக்கினான். அதிகார வரம்பு பகிர்ந்தளிக்கப் பட்டதால் மக்கள் எதிர்ப்பும் குறைந்திருந்தது. ஆனால் பின்னர் வந்த நாயக்க மன்னர்கள் பலவீனம் அடைந்தனர். இதனால் ஓரளவு சுய அதிகாரம் பெற்றிருந்த பாளையக்காரர்கள், நாயக்கர் ஆட்சியின் கட்டுப்பாட்டிலிருந்து சிறிது சிறிதாக விலகினார்கள்.*

*இப்படி சுயாட்சி பெற்ற பாளையங்களில் ஒன்றுதான் நெற்கட்டான்செவல் பாளையம். இந்திய விடுதலைப் போருக்கான*

முதல் குரல் தென்னகத்தின் இந்தப் பாளையத்திலிருந்துதான் ஒலித்தது.

நெற்கட்டான்செவல் பாளையத்தை சித்திரபுத்திரத் தேவர் ஆட்சி செய்தார். குறையற்ற முறையில் அறுபத்து மூன்று ஆண்டுகள் ஆண்டு வந்த அவருடைய ஆட்சியில் மக்களுக்கு அதிருப்தி எதுவும் ஏற்படவில்லை. சுற்றிலுமிருந்த பாளையக்காரர்கள் மத்தியில் அவருக்கு செல்வாக்கும் இருந்தது.

இந்த சித்திரபுத்திரத் தேவருக்கும் சிவஞான நாச்சியாருக்கும் புதல்வராக 1.9.1715–ல் தோன்றியவர்தான் பூலித்தேவன். இயற்பெயர், ‘காத்தப்ப பூலித்தேவன்’ என்பது. ஆனால் இவரை ‘பூலித்தேவன்’ என்றும் ‘புலித்தேவன்’ என்றும் மக்கள் அழைத்தனர். நெற்கட்டான்செவலுக்கு ஆவுடையார்புரம் என்ற பெயரும் வழங்கிவந்துள்ளது.

பூலித்தேவனின் இளமை வாழ்க்கை, வீரமும் ஆன்மிகமும் கலந்த சூழலில் இருந்தது. சிறுவயதில் அவர் தாதிகளிடம் தன்னுடைய முன்னோர் பற்றிய வீர வரலாறுகளைக் கேட்டு வளர்ந்தார். அந்தப் பிஞ்சு உள்ளத்தில் இறையுணர்வு பற்றிய தெளிவான விளக்கமும் பதிய வைக்கப்பட்டது.

பூலித்தேவனுக்கு ஆறு வயது ஆனபோது அவருக்கு முறைப்படி கல்வி அளிக்கப்பட்டது. இலஞ்சியைச் சேர்ந்த சுப்பிரமணிய பிள்ளை என்பவரிடம் நன்நெறிகளைப் பயின்று வந்தார். மற்ற தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களையும் கற்று, தாமே கவிதை எழுதும் அளவுக்குத் திறம் பெற்று விளங்கினார்.

இளமைக்கால அனுபவங்களால், பூலித்தேவன் சிறுவயதிலேயே வீர உணர்வும், இறை உணர்வும் மிகுந்தவராக விளங்கினார். அவர்களுடைய குல தெய்வமான பூலுடையார் கோயில் – உள்ளமுடையாரைத் தினமும் வணங்கி வந்தார் பூலித்தேவன்.

பூலித்தேவனுக்கு பன்னிரண்டு வயதானபோது அவருக்குப் போர்ப் பயிற்சி அளிக்கப்பட்டது. அனைத்து விதமான வீரவிளையாட்டுகளிலும் அவருக்குப் பயிற்சி தரப்பட்டது.

காத்தப்ப பூலித்தேவனின் திறமையும் புகழும் அந்தப் பாளையம் முழுவதும் எதிரொலித்தது. அவரது வீரம் கண்ட பெற்றோர் அவருடைய பன்னிரண்டாவது வயதில் அவருக்குப் பட்டம் சூட்டினார்கள். அதாவது 1726-ல் பூலித்தேவன் ராஜ்ஜியத்தின் பொறுப்பை ஏற்றார்.

பூலித்தேவனின் ஆற்றலைக் கண்டுதான் அவருடைய பெற்றோர்கள் அவரை அத்தனை இளம் வயதில் துணிந்து அரச பொறுப்பைக் கொடுத்தனர். நெற்கட்டான்செவல் மக்களும் இந்த முடிவை மனமுவந்து வரவேற்றார்கள்.

பூலித்தேவனை புலித்தேவன் என்றும் அழைத்தார்கள் என்று பார்த்தோமல்லவா! அதற்கு இன்னொரு கதையையும் சொல்கிறார்கள். இந்தக் கதை பூலித்தேவன் பற்றிய நாட்டுப் பாடல்களில் மிகப் பிரமாதமாகப் பாடப்படுகிறது.

மதுரையில் விசயரங்க சொக்கநாத நாயக்கர் (1704-1731) ஆட்சிக்காலத்தில், மதுரையின் வட பகுதியில் புலி ஒன்று பதுங்கியிருந்தது. அவ்வழியாகப் போவோரையும், வருவோரையும் கொன்று கொண்டிருந்தது. எவராலும் அடக்க இயலாதுபோன அந்தப் புலியை அடக்குவோருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும் என்று, அனைத்து பாளையக்காரர்களுக்கும் ஓலை அனுப்பப்பட்டது.

இச்செய்தியை அறிந்தவுடன் பூலித்தேவன் மதுரைக்குப் புறப்பட்டுச் சென்றார். புலி பதுங்கியிருந்த பகுதிக்குச் சென்றதும் அவரது காலடி ஓசையைக் கேட்டவுடன் புலியானது பூலித்தேவன் மீது பாய்ந்தது. முதல் பாய்ச்சலுக்கு புலியிடமிருந்து ஒதுங்கினார். இரண்டாவதாக புலி அவர்மீது பாய்வதற்கு முன்னர் சட்டென்று புலியின் மீது பாய்ந்தார். அதன் பின்னங்கால்களைப் பிடித்து தலைக்கு மேல் தூக்கினார். பலம்கொண்ட மட்டும் ஓங்கி, பின் தரையில் அடித்தார். பூலித்தேவனின் வலிமையைத் தாங்க இயலாத புலி, ரத்தம் கக்கி இறந்தது. இதனால் இவருடைய புகழ் தென்னகம் முழுவதும் பரவியது. மதுரை மன்னனும் ‘வடக்காத்தான் பூலித்தேவன்’ என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தான். பூலித்தேவன் புலித்தேவன் ஆனதும் இந்த நிகழ்ச்சியால்தான் என்பர் சிலர்.

**பூலித்தேவனின் வாழ்க்கை :**

பூலித்தேவனைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் அதிகம் கிடைக்கப்பெறாவிட்டாலும் அவரைப் பற்றிய நாட்டுப்புறப் பாடல்கள் அதிகம் கிடைக்கின்றன. ஒரு நாட்டுப்புறப் பாடலில் பூலித்தேவன் ஆறடி உயரமுடையவர்; ஒளி வீசும் முகமும், வீரம் பொருந்திய திண் தோள்களும், பவள உதடுகளும், உரம் மிகுந்த மார்பும் பொருந்தியவராகக் கூறப்பட்டுள்ளது.

பூலித்தேவனுக்கு திருமண ஏற்பாடுகள் தடபுடலாக நடைபெற்றன. அவருடைய மாமன் மகள் கயல்கண்ணி என்கின்ற லட்சுமி நாச்சியார், பூலித்தேவனுக்கு வாழ்க்கைத் துணைவியாக அமைந்தார்.

கயல்கண்ணியின் சகோதரன் சவுணத்தேவனும், பூலித்தேவனும் இணைபிரியாத நண்பர்களாக இருந்தார்கள். பூலித்தேவன் தம்பதியின் மண வாழ்க்கைக்கு அணிகலன்களாக, கோமதி முத்துத் தலவாச்சி, சித்திரபுத்திரத் தேவன் மற்றும் சிவஞான பாண்டியன் என்று மூன்று மக்கள் பிறந்தனர்.

*அப்போது பூலித்தேவனுக்கு வயது பதினெட்டு. கிழக்குப் பாளையங்களைச் சேர்ந்த இலவந்தூர், ஈராட்சி ஆகியவற்றுக்கு இடையே எல்லைத் தகராறு முளைத்தது. இந்தத் தகராறைத் தீர்த்து வைப்பதற்காகச் சென்றார் பூலித்தேவன்.*

*அந்த நேரம் பார்த்து, சிவகிரி பாளையத்தான் நெற்கட்டும்செவல் பாளையத்துக்குள் புகுந்து, அங்கிருந்த கால்நடைகளைக் கவர்ந்து சென்றான். அந்த நேரத்தில், அருகருகே இருந்த பாளையங்கள், ஜமீன்கள் எல்லாம் அடுத்த பாளையங்களுக்குள் புகுந்து, ஆடு, மாடுகளைக் கவர்ந்து செல்வதும், விளையும் தறுவாயில் இருக்கும் பயிர்களை அறுத்துக் கொண்டு ஓடுவதுமாக இருந்தனர். இப்படி சந்திக்கும் திருட்டு வேலைகளில் இருந்தே தங்கள் பகுதியைப் பாதுகாத்துக் கொள்ள மிகவும் பிரயத்தனப்பட வேண்டியிருந்தது இவர்களுக்கு.*

*நெற்கட்டும்செவல் பாளையத்திலிருந்து சிவகிரி பாளையத்தான் ஆடுமாடுகளை களவாடிச் செல்லும் செய்தி ஒற்றன் மூலம் பூலித்தேவனுக்குத் தெரிந்தது. உடனே அவர் தன் தளபதியான சவுணத்தேவனுக்கு செய்தி அனுப்பினார். எப்படியாவது, சிவகிரி பாளையக்காரனை தடுத்து நிறுத்தவேண்டும் என்று உத்தரவிட்டார். சவுணத்தேவனும் அப்படியே செய்தார்.*

*சற்றும் தாமதிக்காமல் பூலித்தேவன் 150 வீரர்களுடன் புறப்பட்டு நேராக சிவகிரிப் படைகளைத் தாக்குவதற்குச் சென்றார். பூலித்தேவன் போர்க்களத்தில் நுழைந்ததும் சிவகிரி படைகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்தது. இதனால், மேலும் பலர் களத்தை விட்டு ஓடினர். பூலித்தேவன் இறுதியில் வெற்றிகரமாக கால்நடைகளை தன் பாளையத்துக்கு மீட்டுவந்தார். போரில் வெற்றிபெற்றாலும் தளபதி சவுணத்தேவன் இந்தப் போரில் தன் உயிரை இழக்க நேரிட்டது.*

*ஒரு வீரனின் மதிப்பும் அவனுடைய இழப்பும் இன்னொரு வீரனாலேயே உணரமுடியும். போரில் மாண்டுவிட்ட சவுணத்தேவன் நினைவாக பூலித்தேவன் ஒரு நினைவுத் தூண் நட்டு பெருமைப்படுத்தினார்.*

*பூலித்தேவன் சிறுவயது முதலே கடவுள் பக்தி நிரம்பியவராக இருந்தார். தாம் எவ்வளவுதான் வலிமை உடையவராக இருந்தாலும் நமக்கும் மேல் கடவுள் என்று ஒருவர் இருக்கிறார் என்ற உணர்வுதான் அவரை சுயகட்டுப்பாட்டில் வைத்தது. அவர் தன்னுடைய குல தெய்வமான உள்ளமுடையாரைத் தினமும் வணங்கி வந்தார். வேதியர்களைக் கொண்டு வேதம் முழங்கச் செய்தார். தினந்தோறும் அன்னதானம் செய்து வந்தார். அதற்காக நிலங்களையும் மானியமாக வழங்கி கோயில்களுக்கு நற்பணி செய்துவந்தார்.*



பாளையத்திலிருந்து வரும் வருமானத்தை நிர்வாகத்துக்கும், மக்களுக்கும் பயன்படுத்தினார். எஞ்சியதை கோயில் திருப்பணிக்காக செலவு செய்தார். தன்னுடைய குலதெய்வமான பூலுடையார்கோயில் தவிர சங்கரன் கோயில், பால்வண்ணநாதர் கோயில், வாசுதேவநல்லூர் அர்த்தநாரீசுவரர் கோயில், நெல்லை வாகையாடி அம்மன் கோயில் மற்றும் மதுரை சொக்கநாதர் கோயில் என்று நெல்லைச் சீமையில் உள்ள பல கோயில்களுக்கும் பூலித்தேவன் திருப்பணி செய்துள்ளார்.

கோயில் திருப்பணிகளோடு மற்ற பொதுப் பணிகளான பயணியர் இளைப்பாற மண்டபங்கள் கட்டுதல், சத்திரம் அமைத்து உணவு வழங்குதல், நீர் நிலைகள் அமைத்தல், கால்வாய்கள் அமைத்து பாசன வசதி பெருக்குதல் என்று மக்களின் தேவை அறிந்து பணி செய்துள்ளார். பூலித்தேவன் மீதான நாட்டுப் பாடல்கள் இன்னும் பல போற்றல்களைக் கொண்டுள்ளன.

**பூலித்தேவனின் வீர வரலாறு:**

பூலித்தேவன் காலம், கிட்டத்தட்ட பாண்டியர் ஆட்சியின் முடிவுக்கட்டத்தில் இருந்தது. அதே நேரத்தில் நாயக்கர் ஆட்சியும் சரிவை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. அதே நேரத்தில், ஆற்காடு நவாப் பதவிக்கான உரிமைப் பிரச்னைகளும் தலைதூக்கியிருந்தன. ஐதராபாத் நிஜாமின் அத்துமீறல்கள் அதிகரித்து வந்தன. அப்போதுதான் தென்னகத்தில் ஆங்கிலேயரும் தலையெடுத்துக் கொண்டிருந்தனர். இப்படி, பெரிய அளவில் நடக்கும் அரசியல் குழப்பங்களாலும் ஆட்சி மாற்றங்களாலும், தங்களைப் போன்ற சிறிய பாளையக்காரர்களுக்கு ஆபத்து ஏற்படும் என்பதை பூலித்தேவன் உணர்ந்தார். என்ன செய்யலாம் என்று யோசித்தார்.

சுற்றிலுமிருந்த பாளையக்காரர்களை இதுகுறித்துப் பேச அழைத்தார். தங்கள் பகுதியைத் தாண்டி வடக்கே நடைபெறும் அரசியல் மாற்றங்கள் பற்றி தீவிரமாக விவாதித்தார். இந்த நேரத்தில், அவர்கள் ஒவ்வொருவரிடமும் இருக்கும் படைபலம் மிகச் சொற்பம் என்பதையும், நிஜாமின் படைகளுடனோ, ஆற்காடு நவாப் குழுவுடனோ அல்லது பீரங்கியும் துப்பாக்கிகளும் ஏந்திவந்து பதம் பார்க்கும் ஆங்கிலேயர் படையுடனோ பாளையக்காரர்களால் எதிர்த்து தாக்குபிடிக்க முடியாது என்பதை உணர்த்தினார். எனவே அனைத்து பாளையக்காரர்களும் இதுபோன்ற தாக்குதல்களை எதிர்கொள்ள ஒரே அணியில் திரளவேண்டிய அவசியத்தை எடுத்துச் சொன்னார்.

இப்படி தங்களுக்குள் ஒரு குழுவை அமைத்து பொது எதிரியை வீழ்த்தலாம் என்று கனவு கண்ட வரை, எல்லாம் சரியாகத்தான் இருந்தது. ஆனால், எப்போது தாங்களாகவே ஒரு அணியை அமைக்கலாம் என்று எண்ணினார்களோ அப்போதே அவர்களுக்குள் சுதந்திர எண்ணம் தலையெடுத்தது. விளைவு – நாயக்கர் ஆட்சியின் கைப்பாவைகளாக இயங்கி கப்பம் செலுத்திக் கொண்டிருந்த பாளையக்காரர்கள், இனியும் தாங்கள் நாயக்கருக்கு அடிமைகள் இல்லை என்பதை வெளிப்படுத்தினார்கள். தொடர்ந்து நாயக்கர் ஆட்சிக்கு கப்பம் கொடுப்பதை நிறுத்தவேண்டும் என்று முடிவெடுத்தார்கள்.

இங்கேதான் சிக்கல் எழுந்தது. வலிமையான ஒரு தலைமையின் கீழ் மதுரையையும் தஞ்சையையும் இணைத்து பலப்படுத்துவதை மறந்து, நெல்லைப் பகுதியை மட்டும் கணக்கில் கொண்டார்கள். எப்போது ஒரு தலைமையின் கீழ் இருந்து விடுபட்டு சுதந்திரமாக இருக்கவேண்டும் என்று முடிவெடுத்தார்களோ அப்போதே அவர்களுக்கு, ஒரு குழுவாக இணைந்து செயல்படுவதிலும் விருப்பம் குறைந்துவிட்டது என்று சொல்லலாம். காரணம், நாயக்கர் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டாலும், எதிர்காலத்தில் பூலித்தேவன் அதுபோல் தங்களைக் கட்டுக்குள் கொண்டுவரலாம் என்கின்ற எண்ணம் அவர்களுக்குள் எழுந்திருக்கலாம். இது உளவியல் சார்ந்தது.

பிற்காலத்தில் அதுதான் நடந்தது. சிதறிய நெல்லிக்காய் மூட்டைபோல் இருந்த பாளையங்களை ஆங்கிலேயர் தூக்கிச் சாப்பிட்டு ஏப்பம் விட்டனர். மூட்டைக்குள்ளே மீதமிருந்த நெல்லிக்காய்கள்போல் ஆனது பூலித்தேவன் நிலை.

தன்னுடைய ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு சொல்லாமல், தன் தாய்மண் அன்னியர் வசம் சிக்கிவிடக் கூடாது என்கிற தன்மான உணர்ச்சியால்தான் இந்தத் திட்டத்தை பூலித்தேவன் முன்வைத்தார். ஆனால் நடந்ததோ வேறு.

பூலித்தேவன் திட்டப்படியே அனைத்து பாளையக்காரர்களும் நாயக்கருக்கு கப்பம் கட்டுவதைத் தவிர்த்தனர். அதே நேரத்தில் முகம்மதியர் படை நாயக்கரை பதம் பார்த்து தங்கள் கட்டுக்குள் கொண்டுவந்தனர். பின்னர் அது மகாராஷ்டிர அரசர்கள் கைகளுக்கு மாறி மீண்டும் முகம்மதியர் கைக்கே வந்தது.

அப்போதுதான் ஆற்காடு நவாபுக்கும் ஐதராபாத் நிஜாமுக்கும் இடையில் அதிகாரப் போட்டி ஏற்பட்டது. அதன் காரணத்தால், இவர்கள் இருவருமே தென்னாட்டை தங்களுக்கு என்று உரிமை கொண்டாடினார்கள். அந்த உரிமையை காரணம் வைத்து கப்பம் வசூலிக்க முனைந்தனர். ஆனால் ஏற்கெனவே நாயக்கருக்கு கப்பம் கட்ட மறுத்து ஒதுங்கியிருந்த பாளையக்காரர்கள், இவர்களுக்கும் கப்பம் கட்ட மறுத்தனர். மேலும், இந்த இரு பிரிவினரும் தங்களுக்குள் யார் கப்பம் வசூலிக்கும் உரிமையாளர் என்று அவர்களுக்குள் தீர்மானித்துக்கொண்டு, பிறகு வந்தால் கப்பம் கட்டுவதாக ஒரு பேச்சுக்குக் கூறினர்.

இந்த நிலையில்தான், ஆற்காடு போர் முடிந்து கப்பம் வசூலிக்கும் உரிமை ஆங்கிலேயர் வசம் வந்திருந்தது. அன்றிலிருந்து ஆங்கிலேயர்கள் தென்னாட்டிலும் தங்கள் உரிமையை விரிவாக்கினார்கள். அதுவரையிலும் மொகலாயப் படைகளுடனேயே போரிட்டு வந்த தென்னகத்து பாளையக்காரர்கள், முதல் முறையாக ஆங்கிலேயருடன் சமர் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தது, ஐதராபாத் நிஜாமும் ஆற்காடு நவாபும்.

ஆனால் ஆங்கிலேயருக்கும் பாளையக்காரர்கள் கப்பம் கட்ட மறுத்தனர். அதனால் கர்னல் ஹெரான் தலைமையில் கம்பெனிப் படைகளும் ஆற்காடு நவாபின் அண்ணன் மாபூஸ்கான் தலைமையில் நவாப் படைகளும் 1755-ல் பாளையக்காரர்களைத் தாக்குவதற்குப் புறப்பட்டது. ஒற்றுமையாக எதிரிகளை எதிர்கொள்வோம் என்று பேச்சளவில் இருந்த பாளையக்காரர்களின் ஒற்றுமை, போர் என்று வந்தவுடன் சிதறிப்போனது.

ஒவ்வொருவரும் தங்கள் பதவியையும் பகுதியையும் பாதுகாக்க எண்ணினார்கள். அதற்காக எப்படிப்பட்ட பொருளையும் இழக்கத் தயாரானார்கள். இறுதியில், சமாதானம் என்ற பெயரில் கப்பம் கட்டினார்கள். இந்த நிலையில் கர்னல் ஹெரானும் மாபூஸ்கானும் தனித்தனியே பிரிந்து இருவேறு திசைகளில் போரிட்டனர்.

அந்த வகையில் மாபூஸ்கான் நெற்கட்டான்செவல் பாளையத்துக்காரரான பூலித்வேனுடன் முதலில் போரிடச் சென்றான். ஆனால் அவனது படை, பூலித்வேன் படைகளால் விரட்டியடிக்கப்பட்டது.

மாபூஸ்கான், கர்னல் அலெக்ஸாண்டர் ஹெரானுக்குச் செய்தி அனுப்பினான். கர்னலும் உடனே புறப்பட்டு வந்தான். இருவரும் சேர்ந்து பூலித்தேவனின் கோட்டையை முற்றுகையிட்டார்கள். ஆங்கிலேயர் வசம் வெடிமருந்துகளும், துப்பாக்கிகளும், பீரங்கிகளும் இருந்தன. ஆனாலும் அவர்களால் பூலித்தேவனின் கோட்டையில் விரிசலை ஏற்படுத்த முடியவில்லை. இறுதியில் அவர்களிடம் இருந்த தளவாடப் பொருட்களும் உணவும் தீர்ந்தன.

இதை அறிந்தவுடன் பூலித்தேவன் தன் படைவீரர்களுடன் கோட்டையிலிருந்து வெளியே வந்து ஆங்கிலப்படைகளைக் கொன்று குவித்தார். ஆங்கிலேயருடனான முதல் போரில் பூலித்தேவன் வெற்றி பெற்றார். அவருடைய வெற்றி எல்லாப் பாளையங்களிலும் எதிரொலித்தது. எனவே ஆங்கிலேயர்கள் மறுபடியும் தாக்க வருவார்கள் என்பதை அறிந்த பூலித்தேவன், மீண்டும் பாளையக்காரர்களை ஒன்றுபடுத்த முயற்சி எடுத்தார். அவருடைய முயற்சி பலிக்கவில்லை. பல பாளையக்காரர்களும் ‘நமக்கேன் வம்பு’ என்று ஒதுங்கத் துவங்கினர்.

எதிரிகளுக்கு எதிராக பூலித்தேவன் செய்த கூட்டணி முயற்சி ஆற்காடு நவாபுக்கும் ஆங்கிலேயருக்கும் தெரிந்தது. அவர்கள் மற்ற பாளையக்காரர்களோடு தொடர்புகொண்டு அவர்களுக்கு சலுகை ஆசைகளைக் காட்டி, பூலித்தேவனோடு சேரவிடாமல் பார்த்துக் கொண்டார்கள். மேலும் இதைப்போல் தாங்கள் ஒரு கூட்டணி அமைக்க வேண்டும் என்று முடிவெடுத்து, சுதேசிப்படை என்ற புதிய படையை உருவாக்கினார்கள். அதை யூசுப்கானிடம் ஒப்படைத்தனர். இவன் தன் பதவி ஆசைக்காக பூலித்தேவனை கடுமையாக எதிர்த்தான்.

1761-ல் கான்சாகிபுடன் நடைபெற்ற போரில் பூலித்தேவன் படை யூசுப்கான் படையிடம் தோற்றது. நவாபின் படையினர் தொடர்ந்து பத்தாண்டுகள் போராடியும் வெற்றி பெற இயலாத நிலையில், இங்கிலாந்திலிருந்து கொண்டுவரப்பட்ட பீரங்கிகளின் உதவியோடு பூலித்தேவனின் கோட்டையில் முதன் முதலாக உடைப்பு ஏற்படுத்தப்பட்டது.

அதற்குப் பிறகு ஆங்கிலேயப் படை, கோட்டைக்குள் புகுந்தது. வேறு வழியின்றி எஞ்சிய படைகளோடு பூலித்தேவன் கடலாடிக்குத் தப்பிச் சென்றார். கோட்டையை விட்டுச் சென்றாலும் ரகசியமாக படைகளைத் திரட்டும் பணியில் ஈடுபட்டார். மாதங்கள் சில கழிந்த பின் பூலித்தேவன் மீண்டும் கோட்டையைப் பிடித்து பாளையத்தைச் சீர்படுத்தினார்.

ஆனால் ஆங்கிலேயரோ நெற்கட்டான்செவல் என்ற சிறிய பாளையத்தைப் பிடிக்க ஒரு நாட்டையே வளைக்கக் கூடிய அளவு பெரும் படையுடன் வந்தனர். 1767 மே மாதம், டொனால்ட்

காம்பைல் தலைமையில் மேஜர் ஃப்ளிண்ட், கேப்டன் ஹார்பர் ஆகியோர் தமது படைகளுடன் உறுதியான வாசுதேவநல்லூர் கோட்டையைத் தாக்கினர். அந்த நிலையிலும் பூலித்தேவன் போரைத் தொடர்ந்தார். ஆனால் ஆங்கிலேயப் படை பீரங்கிகளின் முன் வாளும் வேலும் தாக்குப்பிடிக்க முடியவில்லை. அப்போது பெய்த பெரு மழையைப் பயன்படுத்தி பூலித்தேவன் தப்பினார். 1767–ல் நடைபெற்ற இந்தப் போரே பூலித்தேவனின் கடைசிப்போர்.

1755 தொடங்கி 1767 வரை பல போர்களை பூலித்தேவன் சந்திக்க நேர்ந்தது. ஒரு சிறிய பாளையத்துக்கு மட்டுமே தலைவனான பூலித்தேவனால் ஆங்கிலேயரையும், கூலிப்படைகளையும் எதிர்த்து பன்னிரண்டு ஆண்டுகள் போர் புரிய முடிந்தது.

பூலித்தேவன் தப்பிச் சென்றாலும், அவர் மீண்டும் படை திரட்டிப் போரிடலாம் என்பதை அறிந்திருந்த ஆங்கிலேயர் அவருடைய உயிரையே இலக்காகக் கொண்டனர். அதனால் அவரைத் தீவிரமாகத் தேடினர். ஆங்கிலேயருக்கு எப்போதும் கைகொடுக்கும் துரோகச் செயலே இப்போதும் கைகொடுத்தது.

இறுதியில் ஆரணிக் கோட்டை தலைவன் மாளிகைக்கு பூலித்தேவனை தந்திரமாக வரவழைத்து கைது செய்தனர். அங்கிருந்து பாளையங்கோட்டைக்குக் கொண்டு செல்லும் வழியில், தம் தெய்வமான சங்கரன்கோயில் சங்கரநயினாரை வழிபட வேண்டும் என்று பூலித்தேவன் விரும்பினார். அதன்படி ஆங்கிலப் படை வீரர்கள் புடைசூழ கோயிலுக்குள் சென்று இறைவனை வழிபட்டார். அப்போது அங்கே புகை மண்டலமும் ஜோதியும் தோன்றி, கைவிலங்குகள் அறுந்து விழ பூலித்தேவன் ஜோதியில் கலந்தார். அதனால்தான் அவர் 'பூலிசிவஞானம்' ஆனார் என்றும் நாட்டுப்புறப் பாடல்களும் பூலித்தேவன் சிந்து போன்ற பாடல்களும் கூறுகின்றன. இன்றைக்கும் சங்கரன்கோயில் கோமதியம்மன் கோயிலுக்குச் சென்றால் அங்கே பூலித்தேவனுக்கு என்று தனியாக ஒரு சன்னிதி அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

ஆனால் இத்தகைய நாட்டுப்புறப் பாடல் கருத்தை மறுத்து மற்றொரு சாரார் கூறுவது... 'பூலித்தேவன் ஆங்கிலேயரால் கைதுசெய்யப்பட்டு தூக்கிலிடப்பட்ட செய்தியை மக்கள் அறிந்தால் அவர்கள் கிளர்ச்சி செய்யக்கூடும் என்று அஞ்சி, ஆங்கிலேயரே இதனை ரகசியமாகச் செய்திருக்கலாம்' என்கின்றனர். இப்படி பூலித்தேவன் என்ற மாவீரனின் மரணம் மர்மம் நிறைந்ததாகவே வரலாற்றில் பதியப்பட்டுவிட்டது.